**FIRST INFORMATION REPORT** — **TAMIL NADU POLICE**, INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102183

1. District மாவட்டம் : விருதுநகர் | PS: ல.ஒ.த.பிரிவு காவல்நிலையம் விருதுநகர் | Year ஆண்டு: 2023 | FIR No. மு.த.அ. எண்: 03/2023 | Date நாள்: 11.06.2023

2. (i) Act சட்டம்: | Sections பிரிவுகள்: 7 of PC Act 1988 as Amendment in 2018
   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from நாள் முதல் : 10.06.2023 | Date to நாள் வரை :
   Time Period நேர அளவு : | Time from நேரம் முதல் : 21.05 hrs | Time to நேரம் வரை : 23.15 hrs.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11.06.2023 | Time நேரம் : 04.30 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம் (கணினியால் தயார் செய்தது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் அழகாபுரி காவல் சோதனை சாவடி, விருதுநகர் சுமார் 25கி.மீ வடமேற்கு.
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.பி.சிவக்குமார் 50/2023 | (b) Father's/ ~~Husband's~~ Name : தந்தை / ~~கணவர்~~ பெயர் பொன்னையன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் மாவட்ட [illegible] அலுவலர். (தனிவட்டாட்சியர், சமூக பாதுகாப்பு திட்டம், திருச்சுழி தாலுகா) | (g) Address : முகவரி திருச்சுழி தாலுகா அலுவலகம், விருதுநகர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. R. மகா.செல்வன் 50/2023, த/பெ. ராஜா, சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் (த.கா.635), குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் குற்றப் புலனாய்வு துறை, விருதுநகர் பிரிவு, விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   தாமதமில்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது.

நான் (கு.இராமசந்திரன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர்) இன்று 11.06.2023ஆம் தேதி அதிகாலை 04.30 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.P.சிவக்குமார் அவர்கள் நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் மனுவையும் அத்துடன் திடீர் இணை ஆய்வு செயல்முறைகள், எதிரியின் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.4,35,000/- ஆகியவற்றையும் சேர்த்து திரு.R.முருகசெல்வன், சிறப்பு உதவி ஆய்வாளர் (த.கா.635), தமிழ்நாடு குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் குற்றப்புலனாய்வு துறை, விருதுநகர் பிரிவு என்பவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த புகார் மனு பின்வருமாறு: அனுப்புனர் திரு.பொ.சிவக்குமார் (50/2023), மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர். விருதுநகர் மாவட்டம். (தனி வட்டாட்சியர், சமூக பாதுகாப்பு திட்டம், திருச்சுழி தாலுகா) விருதுநகர் மாவட்டம். பெறுநர் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். பொருள் : விருதுநகர் மாவட்டம் - தமிழ்நாடு குடிமை பொருள் வழங்கல் மற்றும் குற்றப்புலனாய்வுத்துறை விருதுநகர் பிரிவு அலுவலகத்தில்

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P.Sivakumar 11.06.2023. (signature)

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் ரேகைப் பதிவு

(signature) 11.06.23

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

11.06.23 at 05.30 hrs.

Name: பெயர் கு.இராமசந்திரன்
Rank: நிலை கூ.கா.கண்காணிப்பாளர், No எண் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர் (OD)

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

விருதுநகர் மாவட்ட ஊ.த.க. பிரிவு குற்ற எண்.03/2023 பிரிவு 7 of Prevention of Corruption Act-1988 as Amended in 2018-இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

பணிபுரிந்து வரும் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.முருகசெல்வன் என்பவர் பயன்படுத்திய நான்கு சக்கர வாகனம் - திடீர் இணை ஆய்வு - லஞ்ச பணம் எனக்கருதி கைப்பற்றியது - நடவடிக்கை எடுக்க வேண்டுவது - தொடர்பாக. நான் விருதுநகர் மாவட்டம், திருச்சுழி தாலுகா, சமூக பாதுகாப்பு திட்டம், தனி வட்டாட்சியராக கடந்த 09.04.2023 அன்று முதலும், அதில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்பேரில் கடந்த 01.04.2023 அன்று முதல் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகவும் இருந்து வருகிறேன். நேற்று (10.06.2023) மாலை சுமார் 17.00 மணியளவில் திருச்சுழி தாலுகா, சமூக பாதுகாப்பு திட்ட அலுவலகத்தில் பணியிலிருந்தபோது, விருதுநகர் மாவட்ட தமிழ்நாடு குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் குற்றப்புலனாய்வு துறை பிரிவு அலுவலகத்தில் தனிப்பிரிவு சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்துவரும் திரு.முருகசெல்வன் என்பவர் TN 59 AU 1549 TATA Indica Vista என்ற நான்கு சக்கர வாகனத்தில் இராஜபாளையம் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதிகளுக்கு பிரதி மாதம் 10ஆம் தேதியில் மாலை நேரத்தில் சென்று தனியார் அரிசி ஆலை உரிமையாளர்களை சந்தித்து, அவர்களிடம் அவர்களது அரிசி ஆலையை உயரதிகாரிகள் அடிக்கடி சோதனை செய்யாமல் இருப்பதற்கும், ரேஷன் அரிசியை வாங்கி அரைத்து கொடுக்கும் அவர்கள்மீது உயரதிகாரிகளிடம் குற்றம் சுமத்தி அறிக்கை அனுப்பாமல் இருப்பதற்கும் மாதாந்திர மாமூல் பணம் வசூல் செய்துவிட்டு, இரவு நேரத்தில் விருதுநகர் மாவட்ட எல்லையிலுள்ள அழகாபுரி காவல் சோதனை சாவடியை கடந்து செல்வதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் மற்றும் விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலர்களின் வேண்டுகோளின்பேரில், நான் விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு மாலை 18.00 மணிக்கு வந்து விபரத்தை கேட்டு தெரிந்துகொண்டு, விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.கு.ராமச்சந்திரன், காவல் ஆய்வாளர் திரு.செ.சால்வன்துரை மற்றும் அவர்களது குழுவினருடன் நேற்று (10.06.2023) மாலை சுமார் 18.30 மணிக்கு விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்தைவிட்டு புறப்பட்டு, 10.06.2023 இரவு சுமார் 20.00 மணியிலிருந்து மேற்படி காவல் அதிகாரிகள் குழுவுடன் விருதுநகர் மாவட்ட காவல் எல்லையில் உள்ள அழகாபுரி காவல் சோதனை சாவடியில் இராஜபாளையம் பகுதியிலிருந்து வருகின்ற வாகனங்களை கண்காணித்துக்கொண்டிருந்தபோது, இரவு சுமார் 21.05 மணியளவில் இராஜபாளையம் பகுதியிலிருந்து TN 59 AU 1549 TATA Indica Vista என்ற வெள்ளைநிற நான்கு சக்கர வாகனம் அழகாபுரி காவல் சோதனை சாவடிக்கு உள்புறம் வராமல் விருதுநகர் பக்கம் செல்வதற்காக விருதுநகர் செல்லும் சாலையில் திரும்பிய வாகனத்தை நான் மேற்படி

அதிகாரிகள் அடங்கிய குழுவினருடன் மறித்தபோது, விருதுநகர் மாவட்ட தமிழ்நாடு குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் குற்றப்புலனாய்வு துறை பிரிவு அலுவலகத்தில் தனிப்பிரிவு சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்துவரும் திரு.R.முருகசெல்வன் என்பவர் அந்த வாகனத்தின் ஓட்டுநர் இருக்கையில் அமர்ந்திருந்தார். அவரிடம் விபரம் சொல்லி திடீர் இணை ஆய்வு செய்யப்பட்டது. பின்னர் மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர் (த.கா.635) திரு.R.முருகசெல்வன் அவர்களை சோதனை செய்ய, அவரது பேண்ட் பாக்கெட்டிலிருந்த மணிபர்ஸில் ரூ.1,510/- இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்க, அது அவரது சொந்த பணம் என்றும், தான் வீட்டிலிருந்து வரும்போது செலவுக்கு ரூ.2,000/- கொண்டுவந்ததாகவும், அதில் காலை, மதிய உணவு மற்றும் மாலை டீ, ஸ்நாக்ஸ்க்கு செலவழித்ததுபோக மீதிப்பணம் என்றும் சொன்னார். ஆகையால் அந்த ரூ.1,510/- பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவர் வந்த நான்குசக்கர வாகனத்தை சோதனை செய்ய, அந்த வாகனத்தின் ஓட்டுநர் இருக்கைக்கு இடதுமுன்பக்கம் உள்ள மற்றொரு இருக்கையின் அடிப்பகுதியில் 500 ரூபாய் நோட்டுக்களும், 200 ரூபாய் நோட்டுக்களுமாக கட்டு கட்டாக பணம் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அவற்றை எடுத்து எண்ணிப் பார்க்க, அதில் 500 ரூபாய் நோட்டுக்கள் 852 எண்ணங்கள் மொத்தம் ரூ.4,26,000/- பணமும், 200 ரூபாய் நோட்டுக்கள் 45 எண்ணங்கள் மொத்தம் ரூ.9,000/- பணமும் ஆக மொத்தம் ரூ.4,35,000/- இருந்தன. அந்த பணம் ரூ.4,35,000/- பற்றி மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.முருகசெல்வனிடம் கேட்க, அதற்கு அவர் தெரியாமல் நடந்துவிட்டது சார் என்றும், ஒவ்வொரு மாதமும் இராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதிகளிலுள்ள அரிசி ஆலை உரிமையாளர்களிடம் மாமூலா வாங்குன பணம்தான் சார் இந்த பணம் என்றும், நீங்க பாத்து என்னைய காப்பாத்துங்க சார் என்றும் கூறினார். ஆகையால் சரி காப்பாத்துறேன், எந்தெந்த அரிசி ஆலை உரிமையாளர்களிடமிருந்து, எவ்வெவ்வளவு பணம் வாங்கியுள்ளீர்கள் என்பதை கூறுங்கள் என்று அவரிடம் குறிப்பாக கேட்க, அதற்கு அவர் அதெல்லாம் வேண்டாம் சார், விடுங்க சார் என்றும், நான் யார் யார்னு அவங்க பேரெல்லாம் சொன்னா எனக்கு பின்னாடி பிரச்சினை வந்திரும் சார் என்று திரும்ப திரும்ப அதையே கூறினார். எனவே அவரது நான்குசக்கர வாகனத்திலிருந்து எடுக்கப்பட்ட ரூ.4,35,000/- பணம் மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.முருகசெல்வன், அவருக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளாக அவரால் சொல்லப்படுகிற இராஜபாளையம் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதிகளிலுள்ள அரிசி ஆலையை உயரதிகாரிகள் அடிக்கடி சோதனை செய்யாமல் இருப்பதற்கும், ரேஷன் அரிசியை வாங்கி அரைத்து கொடுக்கும் அந்த ஆலை உரிமையாளர்கள்மீது உயரதிகாரிகளிடம் குற்றம் சுமத்தி அறிக்கை அனுப்பாமல் இருப்பதற்கும் மாதாந்திர மாமூல் பணமாக வசூல் செய்யப்பட்ட பணம் என்றும், அவரால் முறையான கணக்கு காட்டப்பட முடியாத பணம் என்றும் கருதி கைப்பற்றப்பட்டது. இது

தொடர்பாக திடீர் இணை ஆய்வு செயல்முறைகள் ஒன்று 10.06.2023 இரவு 21.05 முதல் 23.15 வரைக்குள் தயார் செய்யப்பட்டது. பின்னர் உடன் மேற்படி சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.முருகசெல்வன் அவர்களை விசாரித்து தனியாக வாக்குமூலம் ஒன்றை பதிவு செய்தேன். மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.முருகசெல்வன் என்பவரால் முறையான கணக்கு காட்டமுடியாத ரூ.4,35,000/- பணம் மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.முருகசெல்வன், அவருக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளாக அவரால் சொல்லப்படுகிற இராஜபாளையம் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதிகளுகளிலுள்ள அரிசி ஆலையை உயரதிகாரிகள் அடிக்கடி சோதனை செய்யாமல் இருப்பதற்கும், ரேஷன் அரிசியை வாங்கி அரைத்து கொடுக்கும் அந்த ஆலை உரிமையாளர்கள்மீது உயரதிகாரிகளிடம் குற்றம் சுமத்தி அறிக்கை அனுப்பாமல் இருப்பதற்கும் மாதாந்திர மாமூலாக வசூல் செய்யப்பட்ட பணம் / லஞ்சப்பணம் என்றும், அவரால் முறையான கணக்கு காட்டப்பட முடியாத பணம் என்றும் தெரியவந்ததால் திரு.முருகசெல்வன், சிறப்பு உதவி ஆய்வாளர் (த.கா.635), தமிழ்நாடு குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் குற்றப்புலனாய்வு துறை, விருதுநகர் பிரிவு, விருதுநகர் என்பவர்மீது வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் திடீர் இணை ஆய்வு செயல்முறைகள் நாள் 10.06.2023, மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.முருகசெல்வன் அவர்களின் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.4,35,000/- ஆகியவற்றையும் சமர்ப்பிக்கிறேன். (sd) P.Sivakumar 11.06.2023 (P.சிவக்குமார்) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர். விருதுநகர் மாவட்டம். (தனி வட்டாட்சியர், சமூக பாதுகாப்பு திட்டம், திருச்சுழி தாலுகா, விருதுநகர் மாவட்டம்) Sir, Received the complaint and registered a case in Virudhunagar, V&AC, Cr.No.3./2023 u/s. 7 of P.C. Act-1988 as Amended in 2018 on 11.06.2023 at 04.30 hrs. The Original F.I.R. and complaint are submitted to the Hon'ble CJM cum Special Judge for P.C. Act cases, Srivilliputhur and copies submitted to the concerned officers. (sd) K.Ramachandran 11.06.2023 (K.RAMACHANDRAN) ADSP/V&AC/VNR(OD).

11.06.23

(K. RAMACHANDRAN)

Additional Superintendent of Police
Vigilance and Anti Corruption
Virudhunagar (OD)